# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

# FAST TRACK COURT, ARANI.
# S.C.No.163/2018

**Deposition of Witness for : P.W.6**
**Name :** திரு.வடிவேல்
**Father's Name :** பெருமாள்
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

1 முதல் 10 எதிரிகள் ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 28-6-2023.**

முதல் விசாரணை -

நான் வயலாத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் கட்டிட வேலை செய்து வருகிறேன். இறந்துபோன சுரேஷ் தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சுரேஷ் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். தேதி மாதம் ஞாபகம் இல்லை. ஒரு 5,6 வருடம் முன்பு இரவு 9 மணி அளவில் நான் வீட்டில்இருந்து வெளியில் வந்தபோது அ.சா.1 சுசீலா என் மகன் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க செல்கிறார் பின்னால் கத்தியை தூக்கிக்கொண்டு நாகப்பன், ஞானவேல், தனசேகரன், இளையவேல், குமரவேல், சேகர் ஓடுவதாக கத்திக்கொண்டு பின்னால் ஓடினார்.

பிறகு இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார். யார் வண்டி என்று தெரியவில்லை. பின்னால் நானும் விஜயமணியும் வேறு ஒரு வாகனத்தில் சென்றோம். புதுப்பாக்கம் வயலாத்தூர் போகும் ரோட்டில் சுரேஷ் கீழே சாய்ந்த

நிலையில் மாமா என்று என்னை அழைத்தார். நான் போய் பார்க்கும்போது மயங்கினார். அப்போது மேலே சொன்ன நபர்கள் ஓடிவிட்டார்கள். ஆம்புலன்ஸ் வந்தது. யார் வரவழைத்தார்கள் என்று எனக்கு தெரியாது.

நான் தான் ஆம்புலன்சில் தூக்கி வைத்தேன். உள்ளே இருந்த மருத்துவர்கள் சுரேசிற்கு முதலுதவி கொடுத்தார்கள். நானும் என்னுடைய மகன் விஜயமணி ஆகியோர் ஆம்புலன்சில் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவமனையில் வரும் வழியிலேயே உயிர் போய்விட்டதாக சொன்னார்கள். பிறகு பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு எடுத்துச் சென்று விட்டார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

போலிசார் விசாரணையில் என் மகன் போன் மூலம் தகவல் சொல்லி தான் நான் அடிப்பட்ட இடத்திற்கு சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி தான். சுசீலா அம்மாளுக்கு அவருடைய மகன் அடிப்பட்டு கிடக்கிறார் ஆம்புலன்சில் ஏற்றுகிறார்கள் என்று தகவல் சொல்லி கேட்டு தான் சொன்னார் என்றால் சுசீலா எதிரிகள் தன் மகனை பின்தொடர்ந்து கத்தி எடுத்துக்கொண்டு செல்வதாக தான் சொன்னார்.

சுசீலா அம்மாள் எனக்கு என்ன உறவு என்றால் என் மனைவியின் அண்ணன் மனைவி. சுசீலா அம்மாள் வீட்டில் இருந்து என்னுடைய வீடு எவ்வளவு தூரம் என்றால் 100 மீட்டர் தூரம். மருத்துவமனைக்கு நான் என்ன நேரத்திற்கு சென்றேன் என்றால் 10.30 மணிக்கு சென்றேன். எங்கள் ஊரில் இருந்து காஞ்சிபுரம் எவ்வளவு தூரம் என்றால் 17 கிலோமீட்டர்.

அடிப்பட்ட நபருடன் ஆம்புலன்சில் நான் மட்டும் சென்றேனா என்றால் நானும் என் மகனும் சென்றோம். எவ்வளவு நேரம் மருத்துவமனையில் இருந்தேன் என்றால் இரவு முழுவதும் மருத்துவமனையில் இருந்தேன். வண்டியில் இருந்து இறக்கும்போதே இறந்துவிட்டதாக மருத்துவர் சொன்னார் என்றால் உள்ளே அழைத்துச் சென்ற பிறகு தான் சொன்னார்.

எங்கள் இரண்டு பேரை தவிர்த்து சுசீலா அம்மாள் உட்பட எங்கள் ஊர்க்காரர்கள் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் 12 மணி முதல் ஒரு மணிக்குள் வந்து விட்டார்கள். மருத்துவர் காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னது எத்தனை மணிக்கு என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நானும் என் மகனும் மருத்துவமனையில் மருத்துவரை பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆம்புலன்ஸில் வந்த ஊழியர்கள் தான் சுரேசை மருத்துவமனைக்கு உள்ளே கொண்டு சென்றார்கள் என்றால் சரி தான்.

1, 1.30க்கெல்லாம் தூசி போலிசார் மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் சுமார் 70 வீடுகள் இருக்கும். மோகனவேல் எனக்கு என்ன உறவு என்றால் உறவு இல்லை. முறை வைத்து அழைப்போம். மோகனவேல் இன்றும் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரி தான். மருத்துவமனைக்கு அன்றைய தினம் மோகனவேல் வந்தார் என்றால் வரவில்லை. புகார் கொடுக்க காவல்நிலையம் சென்றேனா என்றால் நான் போகவில்லை. யார் கொடுத்தார்கள் என்றும் எனக்கு தெரியாது.

மோகனவேல் 2011 மற்றும் 2016 வருட ஊராட்சி மன்ற தலைவர்

பதவிக்கு போட்டியிட்டார் என்றால் 2016ல் போட்டியிட்டார். 2016ல் மோகனவேலுக்கு எதிராக போட்டியிட்டவர் யார் என்றால் பெருமாள். பெருமாள் மோகனவேலுக்கு மாமா. சாட்சி தற்போது 2016ல் மோகனவேல் மாமா பெருமாளுக்கு எதிராக நாகப்பனின் மனைவி அமுலரசி போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

பெருமாளின் மகள் பெயர் இசைவாணி என்றால் சரி தான். மோகனவேல், இசைவாணி, இளையபாரதி ஆகியோர் மீது ஒரு கொலை வழக்கு உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இளையபாரதி மீது உள்ளது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், இறந்துபோனவர் என்னுடைய மச்சான் மகன் என்பதால் என்னை சாட்சியாக இந்த வழக்கில் சேர்த்துள்ளனர் என்றால் சரியல்ல.

அடிப்பட்டதாக சொல்லப்படும் இடம் வளைவான ரோடு என்றால் சரி தான். போக்குவரத்து அதிகம் உள்ள சாலை இல்லை என்றால் சரி தான். ஏதோ ஒரு வாகனம் மோதியோ, நாய் நரி குறுக்கே வந்து கீழே விழுந்து அடிப்பட்டு இறந்ததை பயன்படுத்தி எதிரிகளுக்கு எதிராக கொடுக்கப்பட்ட புகாருக்கு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சுசீலா ஓடிவந்து சொன்னதும், நாங்கள் போய் பார்த்ததும், அப்போது எதிரிகள் ஓடியதும் இவ்வழக்கிற்காக சொல்லப்பட்ட பொய் என்றால் சரியல்ல.

<u>7 முதல் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை எத்தனை முறை விசாரணை செய்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. என்றைக்கு விசாரித்தார்கள் என்றால் அன்று இரவே 1 மணிக்கு மேல் என்னை

விசாரித்தார்கள். நான் மருத்துவமனையில் சேர்த்த மறுநாள் காலை 6 மணிக்கு போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரி தான். ஒத்துழைக்க சொன்னார்கள். நாங்கள் சொல்லும்போது தான் போய் பார்க்கவேண்டும் என்று சொன்னார்கள்.

போலிசார் விசாரித்தபோது சுசீலா அம்மாள் தன் மகன் காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க செல்வது சம்பந்தமாகவும், 1 முதல் 6 எதிரிகள் கத்தி எடுத்துக்கொண்டு பின்தொடர்ந்து சென்றது சம்பந்தமாக சொன்னேனா என்றால் சொல்லவில்லை. போலிசார் விசாரணையில் நானும் விஜயமணியும் இருசக்கர வாகனத்தில் பின்னால் சென்றது குறித்து சொல்லவில்லை என்றால் சரி தான்.

நாங்கள் அடிப்பட்ட இடம் சென்றபோது சுரேஷ் என்னை மாமா என்று அழைத்ததும், அப்போது 1 முதல் 6 எதிரிகள் ஓடி சென்றது குறித்தும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. போலிசார் விசாரணையில் எதுவும் சொல்லாமல் தற்போது போலிசார் சொல்லிக்கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் எனக்கு யாரும் எதுவும் சொல்லிக்கொடுக்கவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.

Additional Sessions Judge,

Arani.